சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 125/2025

பெயர் : கார்த்திகேயன்
தகப்பனார் பெயர் :கோவிந்தராஜ்
கணவர் பெயர் :
வயது :32
கிராமம் :மூன்றுமாவடி
வட்டம் :மதுரை
தொழில் :மூன்றுமாவடி கனரா வங்கி, முதுநிலை மேலாளர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

16.03.2026

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 1ம் பிரதிவாதி தொழிற்கடன் வேண்டி சிண்டிகேட் வங்கியில் கொடுத்துள்ள கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 சிண்டிகேட் வங்கியுடன் 1ம் பிரதிவாதி ஏற்படுத்தி கொண்ட கொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.2. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு கொடுத்துள்ள உத்தரவாத ஒப்பந்தம் வா.சா.ஆ.3. சிண்டிகேட் வங்கி, 1ம் பிரதிவாதி பெற்ற கடனிற்கு ஆதரவாக அவரது தந்தை மாயாண்டி கொடுத்துள்ள அசையும், அசையா சொத்துக்களுக்கான பட்டியல் வா.சா.ஆ.4. 03.07.2017 தேதியிட்ட கடன் அங்கீகார கடிதம் வா.சா.ஆ.5. 30.06.2020 தேதியிட்ட கடன் அங்கீகார கடிதம் வா.சா.ஆ.6. 17.03.2023 தேதியிட்ட கடன் புதுப்பிப்பு ஆவணம் வா.சா.ஆ.7. வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.8. மேற்படி அறிவிப்பு சார்பு செய்யப்படாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சல் மேலுறை வா.சா.ஆ.9. கடன்

வரவு செலவு கணக்கு வா.சா.ஆ.10. சிண்டிகேட் வங்கி கனரா வங்கியுடன் இணைக்கப்பட்டதற்கான ஆவணம் வா.சா.ஆ.11.

(குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.16 19:53:44 +0530

Sub Judge
Melur